# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 411/F/2024**

திரு.R.சிவகுமார் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை, .. பொது அதிகார அமைப்பு
தலைமைச்செயலகம்,
சென்னை-9.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.R.சிவகுமார் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.சு.சத்யா, பிரிவு அலுவலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 24/12/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் Certified copy under RTI Act of HUD File No.14770/UDII/2020 with Note File and Current File-Full set of files requested(Action taken copy of CMDA letter No.E2/5071/2020, dated 27.10.2020 and there on address to the Secretary to Government,

Housing and Urban Development department required based on the reference cited above and Finance BPE) and provide the information போன்ற தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 24.01.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)ன் கீழ் 27.01.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 28.10.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்கள் மற்றும் ஒப்புகை அட்டையின் நகலினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்கள் மனுதாரருக்கு 28.10.2024 நாளிட்ட கடிதம் மற்றும் இணைப்புகள் மூலம் தகவல் வழங்கப்பட்டிருப்பதையும் அதனை ஏற்று மனுதாரர் ஆணையத்திற்கு மனநிறைவு கடிதம் வழங்கியுள்ளதையும் உறுதி செய்து இப்புகார் மனுவின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 411/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-9.

**புகார்தாரர்:-**

திரு.சிவகுமார்,
Zeinou பிளாட்-S1 இரண்டாம் தளம்,
எண்.28 (11), சௌரட்ரிய நகர் முதல் தெரு,
சூளைமேடு,
சென்னை-600 094.

Copy to file: KR/PA